**S.C. No.304/2019**

**P.W.7 – திரு.பொம்மையசாமி**

16.03.2026

(2 எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை. 1வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

(சாட்சி அரசு தரப்பு மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி :</u>**

என்னிடம் காட்டப்படுவது வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துகளை அழிப்பதற்காக வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு அழித்தற்கு பின்னால் சம்மந்தப்பட்ட ஆய்வாளர் எனக்கு வழங்கிய சான்றிதழ். மேற்படி சான்றிதழ் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சான்றுபொருட்கள் மட்டும் அதனை அழித்ததை எடுத்த புகைப்படங்கள் மற்றும் சிடி **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கில் கைப்பற்றபட்ட சான்று பொருட்களின் சொத்துகளை படிவம் 91 மூலம் நீதித்துறை நடுவர் எண்.2, உசிலம்பட்டி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 91 **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் சான்றுபொருட்களை ஏற்றி வந்த (வெடிபொருட்கள்) வாகனத்தின் போட்டோகள் (4 எண்ணம்) **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

நான் இந்த வழக்கில் கைப்பற்றபட்ட சான்றுபொருட்களை அழிப்பதற்கு **அ.சா.5** சிங்கத்திடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேனா என்றால், கொடுத்தேன். நான் அவ்வாறு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என்னை தவிர மாநகர காவல் ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர் அவர்களோ எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. இந்த வழக்கில் மாதிரி எவ்வளவு எடுக்கப்பட்டது என்று எடை குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. வழக்கு சொத்துகளை அழிப்பதற்கு முன்போ அல்லது பின்போ புகைப்படங்கள் எடுத்ததாக **அ.சா.ஆ.3** அறிக்கையில் குறிப்பிடவில்லை.

அதேபோல் **அ.சா.5** சிங்கத்தின் குவிமுச பிரிவு 161(3) வாக்குமூலத்திலும் வழக்கு சொத்துகளை அழிப்பதற்கு முன்போ அல்லது பின்போ புகைப்படங்கள் எடுத்ததாக குறிப்பிடவில்லை. மேற்படி வழக்குசொத்தின் புகைப்படங்களில் வழக்கு சொத்துக்கள் பிளாஸ்டிக் பைகளால் பேக் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் வழக்குச்சொத்துகளை மதுரை மாவட்டம் கரடிக்கல்லில் உள்ள வெடிப்பொருட்கள் வைத்திருக்கும் குடோனில் வைக்க வேண்டி பரமன் என்பவரிடம் வேண்டுகோள் கடிதம் 22.03.2016ம் தேதி கொடுத்தேன். அன்றைய தினமே பொருட்களை பெற்றுக்கொண்டதாக எழுதி கையொப்பம் செய்துள்ளார் என்றால், சரிதான். வழக்கு சொத்துகளானது 31.03.2016ம் தேதி நீதித்துறை நடுவர் எண்.2 உசிலம்பட்டி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த அழிக்கபட்ட சொத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பரமனை சாட்சியாக விசாரிக்கவில்லை. **அ.சா.5** சிங்கத்தின் குவிமுச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் ஜெலட்டின் குச்சிகளை எரிப்பதற்கு முன்பு மாதிரிகள் எடுத்தாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை அழிப்பதற்கு முன்பும், பின்பும் மண் மாதிரிகளை சேகரித்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். **அ.சா.ஆ.3** அறிக்கையில் மாதிரி ஆனது பாலிதீன் கவரில் பேக் செய்யப்பட்டு சீலிடப்பட்டு ஒப்படைக்கப்பட்டதாக கண்டுள்ளது. **அ.சா.5** சிங்கம் மற்றும் **அ.சா.6** ஆம்ரூஸ்பிரிட்டோ ஆகியோர்களின் குவிமுச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் பேப்பரில் பேக் செய்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். நான் வழக்குச்சொத்துகளை தடய அறிவியல் துறைக்கோ அல்லது வெடிபொருள் கட்டுப்பாட்டு அலுவலர் ஆகியோர்களுக்கு அனுப்பி வழக்குச்சொத்துகள் எந்த வகையை சார்ந்தது என்று அறிக்கை பெறவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எந்த பொருட்களும் அழிக்கப்படவில்லை என்றும், அழிக்கப்பட்டதாக சொல்லப்பட்டு மாதிரிகள் பெறப்பட்டதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கை சரியாக விசாரிக்காமல் குற்ற இறுதி அறிக்கை

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. படிவம் 91 ஆவணத்தில் தேதி 23 என்று எழுதப்பட்டு என்று எழுதி 22 என்று திருத்தப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதே போல் நேரமும் திருத்தப்பட்டுள்ளது. படிவம் 91 வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**1 வது எதிரி தரப்பில் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை 2 வது எதிரி தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.**

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.16 18:48:43 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.